செய்தி வெளியீடு எண்.48 நாள்.20.01.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

--------------

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் இன்று (20.01.2017) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை சொர்ண்வாரி பருவத்தில் நெற் பயிரில் 26525 ஹெக்டெரும், சம்பா பருவத்தில் 51026 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 981 ஹெக்டெரும், சொர்ணவாரி பருவத்தில் திருந்திய நெற்பயிரில் 19064 ஹெக்டெரும். சம்பா பருவத்தில் திருந்திய நெல் பயிர் 36423 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 768 ஹெக்டெரும், கரும்பு நடவில் 786 ஹெக்டெரும், கரும்பு மறுதாம்பில் 5162 ஹெக்டெரும். பயறுவகை பயிர்களில் 1485 ஹெக்டெரும், எண்ணைய்வித்துக்கள் 2756 ஹெக்டெரும் பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 89705 ஹெக்டெர் ஆகும். இவற்றில் வர்தா புயல் காரணமாக 32240.9211 பரப்பளவில் பாதிப்படைந்த நெற்பயிர்களுக்கு 52060 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வழங்கப்பட்டள்ளது. மேலும் 6114.8 ஹெக்டெர் பரப்பளவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் விடுபட்ட விவசாயிகளுக்கு, விவசாயின் பெயர், சர்வே எண் கிராமம் போன்ற விவரங்களை விவரமாக தெரிவித்து மனுக்கள் அளிக்கப்பட்டால் அதன் மீது நடவடிக்கை எடுத்து கள ஆய்வு செய்து பயிர்பாதிப்பு 33% மேல் இருப்பின் பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்தார். வறட்சியிகால் பாதித்த பயிர்களுக்கான நிவாரணநிதி அரசிடமிருந்து வரப்பெறவில்லை. நிதி வரப்பெற்றவுடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பபடும் என தெரிவித்தார். பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 30133 விவசாயிகள் பிரிமியம் தொகை செலுத்தி உள்ளார்கள் எனவும். வர்தா மற்றும் வறட்சி காரணமாக நெற் பயிர் பாதிக்கப்பட்ட பகுதியில் பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொண்டு மகசூல் கணிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் அனைத்து அறுவடை மகசூல் விவரங்கள் பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பி உரிய இழப்பீடு விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் வர்தா புயலால் பாதிக்கப்பட்ட மின்கம்பங்களை சரிசெய்ய பிற மாவட்டங்களிலிருந்து சுமார் 5000 பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு இரவு பகல் பாராமல் பணி செய்து திருவள்ளூர் மாவட்டத்தில் 28000 மின் கம்பங்களுக்கு மேல் மாற்றப்பட்டுள்ளன எனவும், கிராமங்களில் மின இணைப்பு அதிவேகத்தில் கொடுக்கப்பட்டது என தெரிவித்தார். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் ஒவ்வொரு மனுவுக்கும் ஒப்புகை சீட்டு கொடுக்க வேண்டும் என அனைத்து துறை அதிகாரிகளுக்கும் வலியுறுத்தினார். வர்தா புயல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கணக்கெடுத்து போர்க்கால அடிப்படையில் பணியாற்றிய அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் பாராட்டுகள் தெரிவித்தார்.

வடகிழக்கு பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக குறைந்த நீர்த்தேவையை கொண்டு குறைந்த வயதுடைய பயறுவகைப்பயிர்களை சாகுபடி செய்ய ஏதுவாக பயறுவகை விதைகளை

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்க வழிவகை செய்யுமாறும். மேலும் மிளகாய் நாற்றுக்களை பெற்று வழங்கும்படி விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். பள்ளிப்பட்டு வட்டம் வெங்கல்ராஜகுப்பம் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் உள்ள மயான பாதையை ஆக்கிரமித்து பயிர் செய்யப்பட்டுள்ளதாகவும், ஊத்துக்கோட்டையில் 7 குடும்பங்களுக்கு பட்டா வழங்கவில்லை என்றும். அம்பத்தூர் வட்டாரத்தில் சுடுகாட்டில் சிமெண்ட் தொழிற்சாலை கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றவும். சிவாடா கூட்டுறவு வங்கி செயல்படாமல் இருப்பதை நடவடிக்கை எடுக்கவும் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

மேய்க்கால், புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பொதுப்பணித் துறை ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், கால்நடைகளினால் பயிர் சேதம் ஏற்படுவதை தவிர்க்க கால்நடை பவுண்டு அமைக்க வேண்டும், கடம்பத்தூரில். தோட்டக்கலைத் துறையின் மூலமாக மாடித் தோட்டம் அமைப்பதற்கு தேவையான விவரங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் முன் வைத்தனர்.

பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு கே.முத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு மகேந்திரன், சார் ஆட்சியர். பொன்னேரி திரு வி.பி.தண்டபாணி வருவாய் கோட்ட அலுவலர் திரு ஜெயச்சந்திரன் (திருவள்ளுர்). திரு விமல்ராஜ் (திருத்தணி). வேளாண்மை இணை இயக்குநர் திரு முருகவேல், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) (பொறுப்பு) திரு வி.எபினேசன், மாவட்ட ஆட்.சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு சுரேஷ் ஜோ குமார் பிரைட், அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**